332

உ
சிவமயம்.



# செட்டிகுளம்
# தெண்டபாணிமாலை.

இவை
இளங்காடு ஸ்ரீலஸ்ரீ புராணவசவேசர் கோத்திரம்
வைரிசெட்டிபாளயம்
வித்வான் ஜேனூர் முத்துசாமி அய்யர் குமாரர்
வீரசைவம் சபாபதி அய்யாவர்களால்
இயற்றப்பெற்று

பாளஹள்ளி சிம்மாசனத்தை சேர்ந்த
பவுத்திரம்டாலயம் பட்டத்து சாமிகள்
கு. அப்பாவய்யரவர்களால்
பார்வையிடப்பட்டு

மு. தா. வைரிசெட்டிபாளையம் பண்டகுல திலகரான
ஸ்ரீமான் N. சுந்தர ரெட்டியார் அவர்களால்
ஸரஸ்வதி பிரிண்டிங் ஒர்க்ஸில்
அச்சிடப்பெற்றது.
1929.

TB
ஐ26':417
N29
WD9082



உ

முருகன் துணை.

கதலிவனமென்னும்

பாளஹள்ளி சிம்மாசனத்தைச்சேர்ந்த

பவுத்திர மடாலயம் அல்லமாப்பிரபு

தேவர். குருசாமிகள் பரம்பரை

பட்டத்துச்சாமிகள்

வித்துவான்

## கு. அப்பாவய்யரவர்களாலியற்றிய

சாற்றுக்கவி.

சீர்தருஞ் செல்வமோங்குஞ் செட்டிமா குளத்துவேதன்
பேர்தரு தண்டபாணி மாலையைப்பேசினானால்
பார்தருவைரி செட்டிபாளையத்திலங் கிலிங்க
வேர்தரு சபாபதிப்பே ரேற்றுளானிசை வுற்றானே.

மு. தா. கொப்பமாபுரி தேவஸ்தானம்

வித்வான்

## S முத்துரெட்டியாரவர்களியற்றிய

ஆசிரியப்பா

சீர்பரவுஞ் செட்டிகுளக்கிரியமர்ந்த தேசிகன்மேல்சிறந்தவன்பால்
பார்பரவும் பலவறிஞர் புகழ்த்தமிழாற்பாமாலை பண்பினீந்தான்
எர்பரவும் புராணவசவேச குருசந்ததியிலினிது வந்தோன்
கார்பரவுங் கண்டனடி கருது சபாபதிப்பெயராங் கவிவலோனே.

சேந்தமங்கலம் மடாலயம் ஸ்ரீ ஸ்வயம் பரகாசப்ர ஹ
மேந்திர ஸரஸ்வதி அவதூது ஸ்வாமிகள்
அடியவர்களில் ஒருவராகிய ஸ்வரம் நிஜாநந்த பிரஹ்மேந்த்ர
ரஸரஸ்திசாமிகள் இயற்றிய சாற்றுக்கவி

கண்ணிறைதன் கனிற்றோன்றுங்கந்தன்மேற்பாமாலைசழறினுனல்
புண்ணியர்தம்மனத்துவளர்புராணவசவன்மரபிற்பொலிய
[வந்தோன்
எண்ணரியசிவபூஜை யியற்றுமெழில் வீரசைவரெவருங்கூடிப்
பண்ணிய நற்றவத்திதித்தபகர்சவிதைச்சபாபதிப்பேர்
[படைத்துளானே.]

ஸ்ரீமந் நாகயநல்லூர் கம்பராமாயணவித்வான்
L. N. V. குப்புசாமிஅய்யர் பாடிய வெண்பா.

மாயோனுங்கூவுண்ணுன் வாலனந்தன் காலுண்ணுன்
சேயோனுஞ் சேயுண்ணுன் தெள்ளமுதம்—பாய்ந்தோடு
நாற்கவிக டான்பாடு ஞானசபா நாயகனின்
பாற்கவிதை நன்குணர்ந்தக் கால்

இந்நூலாசிரியர் மாணவன்
வை. ம. சந்தனம் பிள்ளை இயற்றிய சாற்றுக்கவி.

தமிழ்வளர்க்குந் திருமரபிலுதித்து சபாபதிநாமந்தரித்தசைவன்
சிமிழ்தனத்துச்சுந்தரத்தைச்சோவெழுந்தருள்புரியுஞ்
செவ்வேளற்கு
வமிழ்தினியமொழியணிப் பாமாலையிணையருச்சித்தவருமைசாற்ற
வமிழ்துடை நாவாயிரத்தோனு.... வாறிங்கேற்றவனென்றறைதல்
நன்றே.

அருண்மொழி கனகசபாபதிமுதிய னறைமணிமாலையினணியைத்
தெருமலியுளத்தன் வ்யரிமாநகரிற் சிறந்துவாழ் சுந்தரச்செல்வன்
குருமணிதண்டபாணியைக் குறித்துமுய்பவர் கொஞ்சமென்
[றெண்ணி
யரும்பொருளுதவிச் சரஸ்வதி பிரசி லச்சியற் றியதைப்பலர்க்
களித்தான்.

கணபதிதுணை

# தெண்டபாணிமாலை.

## காப்பு

ஆரணத்தினொலியகலாவரிய செட்டி குளம்வதியும்
வாரணநற் கொடியோன்றன் மலரடிக்கு வண்டமிழா
லேரணிநற் பாமாலை யேற்றியணிந்திட நாளும்
வாரணமாமுகக் களிற்றின் மலரடியைப் போற்றுவாம். (1)

## சிவபெருமான்றுதி.

தேடியமாலினுக்க கப்படாத தாள்
பாடிய சுந்தரற் கபயமீந்ததாள்
தேடிய கூற்றுயிர் செகுத்துமன்றினில்
ஆடியே சிவந்ததா ளென்னையாண்டதாள். (2)

## சிவசக்திதுதி.

சத்துசித்து நல்லானந்தமாயொளிர்
முத்திதன்னை முதல்வனொடு தழீஇ
சித்தி தங்கிய செம்மனத்தோர்க்கருள்
சத்திபாதந்தலைக் கணியாக்குவாம். (3)

## சுப்பிரமணியர் துதி.

ஒருமுருகா வென்றடியினைத்தொடுத்து
வுயரறு படையினைப் புனைந்த
திருவுடைப்புலவற் கொன்றிடவந்த
சேனுயர் பூதத்தைக்கொன்று
மருவுநற்கீரன் மூவொன்பதான வரிசையா
மடியரைக் காத்த
திருவடிவேலன் சீர்த்திருப்பதத்தைச்
சேர்த்தனனென் சிரமீதே. (4)

## நால்வர்கள் துதி

கும்பமுற்ற குறைவுறு வென்பினை
சம்புவின்றன் றயைகொடுமாதுவாய்
உம்பர் போற்று முயர்பதம் நல்கிய
சம்பந்தன் றிருத்தாண் மலர் போற்றுவாம். (5)

செப்பமைந்த திருக்கருங்கல்லினை
வெப்பமின்றி வியப்பருந் தோணியாய்
ஒப்பில்வாரியுலாவிய சீருடை
அப்பன்றன்னிரு பொற்பதம் போற்றுவாம். (6)

வேதமின்னு மறியா விகிர்தனை
யோது நல்லிருளூற்ற மறுகிடைப்
பாதநோவப்பரவையின் பக்கலிற்
றாதுவிட்ட புலவற்றொழுவமால் (7)

போதமுற்ற பொருளினைப்பாவதாய்
பேதமற்ற பெருந்தமிழ்ப்பாடையிற்
பாதந்தூக்கிய பண்ணவர்க் கோதிய
வாதவூரான் மலரடிபோற்றுவாம் (8)

சிவப்பிரகாசசுவாமிகள் துதி.

ஒருககரவுகரமதை முதலுமீறா
முனாற்றிய வெண்பாவதனையுணர்ந்து வெள்ளி
மருவுமன்றுக்கவிவாண னின்னாலென்றன்
வன்பகையைச்செயம்பெற்றுவருவாயென்ன
திருமருவுசெந்திலுற்று முருகன்முன்னிற்
றிகழ்வில்லிதனைச் செயித்து நிரோட்டகத்
றருவைநிகர்க்குருபாதம் பணியச்செய்த [தாற்]
சான்றசிவப்பிரகாசன் சரணம்போற்றி. (9)

அவையடக்கம்.

கல்வியின்றுறையறிந்துகற்றநற்புலவனல்லேன் [லோர்]
சொல்லுமிப்போலிச் செய்யுள்சொற்குறைகூறார்நல்
வல்லராம்பெரியோர்செய்யவளரிளங்குழவிகூறுஞ்
சொல்லினிற்குற்ற மோர்ந்து துரப்பவருலகி
லுண்டோ. (10)

உ

சிவமயம்

# தெண்டபாணிமாலை.

---

சீர்தரு முடியிற்றண்மதிதரித்த
சிவனிடத்தெழுந்து தீவடிவாய்
கூர்தருநாணற் குழவியாயொளிர்ந்து
கூடிய கார்த்திகைக்கருளு
நீர்மையிலெனக்குக் காட்சியீந்தருளாய்
நியதியர் காவடி கொண்டு
சேர்தரு செட்டி குளந்தனி லமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (1)

சொன்னமாபுரியைப்பாழ்செய்த சூரைத்
தொலைத்துமுற் சுரபதிதனக்கு
அன்னதோர்நகரை யரசதுபுரிய
வளித்திடு மாறுமாமுகனே
இன்னல்வாராது பவவினை யதனை
யேகிடக்கிருபை நீ செய்யாய்
சென்னெல்சூழ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (2)

அருமறைமுதலாம் பிரணவமதனை
யனகணற்கருளியபெரியோய்
தெருமரலுற்ற வடியனேன்றன்னைச்
சீரடிக்கன்ப னுக் கிடுவாய்
குருமணி கொழிக்குந்தடம் பலவுடைத்தாய்
கோக்கனல் லயிர்திணைப்பொழியுக்
திருவளர் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (3)

திருப்பரங்குன்ற மாவினங் குடியுஞ்
சென்னியம் பதியொடு செந்திற்
றருப்பொலிந்தொளிரும் பழமுதிர்சோலைச்
சாமியங்கிரியொடு வேளூர்
பருப்பதக்கிரியி லமர்ந்திடுபவனே
பாவியேன் மனக்கிரியுறைவாய்
திருப்பொலி செட்டி குளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (4)

பிரணவமறியாப் பிரமனைத்தலையிற்
பெட்புறக்குட்டியுஞ்சிறையிற்
றிறமுறவடைத்து மவன்புரிசெயலைத்
திறம்படச் செய்தசெங்கரத்தோய்
நரம்பொடுதசையுநிணங் கொளுமுடலை
நம்பியவென்றனைக்காவாய்
சிறந்தொளிர் செட்டி குளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (5)

காணுறும் பித்த வாதசேட்டுமத்தாற்
கலங்குமிவ் வுடல்[illegible]ந் திடுமுன்
வாணுதற்சத்தி யிருவருமருங்கு
வளர்ந்திடமயின்மிசை வருவாய்
பாணுறுமளிகள் பண்ணிசைபாடும்
பலதடஞ்சூழ்ந்தொளிர்சோலை
சேணுயர்செட்டி குளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (6)

மாவடிவாகிச் சூரொளித்திருந்த
வாரியைச்சுவற்றியவடிவேல்
நோவடிவான பிறவியின் கடலை
நூறிடக்கடைக்கணித்தருளாய்
காவடியோடுன்னடியவர் போற்றக்
கலாபத்தின் வெரின் மிசைவிளங்குஞ்
சேவடிசெட்டி குளந்தனி லமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே (7)

தெள்ளுசீர்ப்பரணிற்றினைப்புனங்காத்த
தெரிவைதன் னெழில் நலங்கருதி
நள்ளிருள்போன்ற வேடர்களறியா
நற்றளிர் வேங்கையாய் நின்று
வள்ளியைக்காத்த வள்ளலேயெனக்கு
வண்பதந்தந்திட வருளாய்
தெள்ளியார் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (8)

காலனைக்கடிந்த கண்ணுதற்புதல்வா
கந்தனே கருணையங்கடலே
பாலனைக்காக்க மனமிரங்கலையோ
பழனியம் பதியினி லமர்ந்த
கோலனே மகவான் குறைகளைத்தீர்த்த
கொற்றவாநற்றவர் போற்றுஞ்
சீலனே செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமேதெண்டபாணியனே (9)

நாரணன் மதலையேவியகணையால்
நான் படுந்துயரொழித்தி[illegible]
வாரணிமுலையா டெய்வயானையொடு
வள்ளியை மணம்புரிபவனே
கோரணிசூரன் குலத்தை வேரறுத்த
குமரனே தோரணம் நிறைந்த
தேரணி செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (10)

குன்றுகடோறும் வீற்றிருந்தருளுங்
குமரனே நின்பதமிறைஞ்சி
நின்றனைப்பாடத்திருவருள்புரிவாய்
நித்தனேநின்மலசொரூபா
கன்றினை யெறிந்தோன் மருகனேவடிவேற்
கையனே பொதிகையினின்று
தென்றலூர் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (11)

இந்திரன் புரிந்த மகத்தினிற்றோன்று
மெழின் மறிமுதுகினிலேறி
அந்தரமுதலா முலகெலாஞ்செலுத்து
மையனே யடியவர்க்கருளுஞ்
சுந்தரஞ்சேருன் பதமலரெனது
தூச்சிரஞ் சூட்டிடவருளாய்
செந்திலாய் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே (12)

திருவளர் புகலிக்கிறையெனத்தோன்றி
தேவியின் றிருமுலைச்செழும்பால்
பருமணிக்கிண்ணந் தாங்கியேயுண்ட
பாலனே பரம்பொருளுருவே
தெருமரலுற்றே நின்றனை யடைந்தேன்
சீர் பதமளித்தருள் புரியாய்
செருனர் வாழ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (13)

பொங்குபாற் கடலிற் றுயில்பவன்மருகா
புணரிநற் சரவண மீது
தங்குகார்த்திகை யினல்லமுதுண்ட
சரவண பவவறு முகவா
பங்கம் வாராதே யென்றனைக்காப்பாய்
பழனியங்கிரி யுறைபவனே
தெங்கு சூழ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (14)

பன்னிருகரமு மாறுமாமுகமும்
பங்கயமனவிருபதமும்
என்னிரு விழியிற்றோன்றி யென்றனக்கு
னெழிறருஞான மீந்திடுவாய்
பன்னிமேனிலத்திற்பதி யினூடோடிப்
பறித்தெறி மணிக்கலன்ஜோதி
சென்னிசேர் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (15)

செந்திலிற்றங்கி வீரவாகுவினைச்
சேணுறுஞ் சூரிடம்போக்கி
பொங்குநல்லறிவை யூட்டிய முறைபோற்
புல்லறிவுறை மன விருளைத்
திங்கள் போல்விளங்கும் வேலினையேவித்
தீர்ந்திடச்செய்யுநாளுளதோ
தெங்குசூழ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (16)

இருவினைக்கிடனாயெடுத்த விவ்வாக்கை
யெங்கணுமலைந்திடாதனது
திருவடிதனிலே வதிந்திடச்செய்வாய்
செந்தின்மாநகரொடுபழனி
மருவியமுருகா ஞானதேசிகனே
மந்திமாங்கனி பறித்தாடுந்
திருவளர் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (17)

காணுறு மடியார்தீவினையிருளைக்
கடிந்திடுங்கதிர் வடி வேலோய்
நாணிலேன் றன்னை நின்பத மிறைஞ்சு
நற்றொழில் புரிந்திட வருளாய்
பாணிசைமகளிர் பண்ணிசைபாடப்
பந்தியின் மயினடச்சோலை
சேணுறு செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (18)

மெய்யினைப்பொய்யென் றுரைத்தநால்வருக்கு
　　மேம்படுபொருளினையீந்தாய்
பொய்யினைப்பொய் யென் றுண்மையையுரைத்த
　　பொறியிலிக்கருள்புரிந்திடாயோ
துய்யநற்கன்னல் கமுகுகளீன்ற
　　சுடரொளிமுத்தினங் கொழிக்குஞ்
செய்கள்சூழ் செட்டிகுளந்தனிலமர்ந்த
　　தெய்வமே தெண்டபாணியனே. (19)

வருந்துமோர்மிடியன் விறனைகித்துணிப்பான்
　　வந்துநின்கிரி யுறுமாத்தை
திருந்தவேதாக்க நவியமேமாழைச்
　　செயலுறுந் தன்மையே போல
வருந்துமஞ்ஞானக் கோடரிநினது
　　மலர்ப்பதப்பரிச வேதிகைமுன்
றிருந்தசெய் செட்டிகுளந்தனிலமர்ந்த
　　தெய்வமே தெண்டபாணியனே. (20)

பாலொடுதயிர் தேன்பழங்கழையிளநீர்
　　டகர்தரு சந்தனக்குழம்பு
மாலறுபூதி தினவபிடேக
　　மாடிடும் பழனியாண்டவனே
வேலொடு தோன்றியடியனைக்காக்க
　　விரைந்துவந்தருள் புரிவாயே
சேலமர் செட்டிகுளந்தனிலமர்ந்த
　　தெய்வமே தெண்டபாணியனே. (21)

நின்பிதாப்பு கழைப்பாடியபாணன்
நிதிபெறச்சேரமான்றனக்கு
அன்பொடு முடங்கலளித்தனனதுபோ
லமலனே யென்றனுக்குன்மே
லன்புவந்திட வேகந்தியெம்பெருமாற்
களித்திடுவாய் திருமுடங்கல்
தென்னுறுஞ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (22)

நின்பகைச் சூரைச் சத்திவேல்கொண்டு
நீக்கினை நின்னடியவனு
மென்பகைதனையே வென்றிடவுன்ற
னெழில்வடிவேலினை விடுவாய்
வன்பகைமாற்றம்யாது செய்திடுவேன்
மலர்ப்பத மிறைஞ்சினேன்கந்த
சின்மயச் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (23)

மயலறக்குளத்தி லெனதுளக்கமல
மலர்ந்திடநின் பெருங்கருணை
வெயிலெழச்செய்வாய் ஞானசூரியனே
வேண்டினர் வேண்டியதளிக்க
மயின்மிசை யேறிவிரைந்துநீவருவாய்
மகளிர்கள் காவடி கொணருஞ்
செயலொளிர் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (24)

மல்வளம்பெருகு நாவலூர்ப்புலவன்
மறுப்பவுந் திருவடியீந்த
நல்குலத்தவனே யென்றலைமீதுன்
நல்லடிசூட்டிட வருளாய்
பல்வளமலர்கள் பரவுநந்தனஞ்சூழ்
பழனியங் கிரியினி லுற்ற
செல்வநற் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (25)

தான்பெறுமகவையீர்த் தூனங்களித்துச்
சமைத்து நின்றந்தையர்க்களித்த
மேன்படுதொண்டன்றனைச் சிறுத்தொண்ட
னென்றவன் மதலைநீயன்றோ
கான்படுவேடனுளநிகர் மனனைக்
கழறுமோ தொண்டநானென்னத்
தேன்படு செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (26)

மூன்றொருபுலவன் பொழியமிர்தத்தை
முற்றுநற் செவியினாலருந்தி
அன்னவன்றன் மீ தாசையால்விழுங்கு
மான்றரு புதல்வநீயன்றோ
சொன்மொழியறியா வறிவிலேன்றன்னைச்
சோதியிற் கலப்பையோவறியேன்
செந்நெல்சூழ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (27)

மன்னன்பாண்டியனாற் பிரம்படிபட்டு
மாணிக்கன் றன்னையாட்கொண்ட
சென்னிசேர் கங்கையரன்மகனீயே
திருவடிக்கன் பனாமெற்கு
உன்னிருபதத்தை யளித்திடி லுன்னை
யோச்சிடுபவருல குண்டோ
தென்னிசூழ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (28)

நீரோடுவிறகு நிலமொடுசங்கு
நீள்சிரம் புயமதிலேற்றப்
பார்தருகல்வில்லடி யினாற்றுக்கும்
பத்தர்கட்கருளினன் மதலாய்
எர்தருபதவி யளித்திடி லுன்னை
யாவரென் செய்குவரையா
சீர்பெறுஞ் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (29)

குன்றினையடைந்தேன் கோபுரங்கண்டேன்
கோபுரவாயிலு ளு[illegible]ந்தே
னுன்றிருவடியைக் கண்டனனபிடித்தே
னுயர்சுகந்தன்னையேவிழைந்தேன்
சென்றிடவல்லேன்றிருவருள்புரியாய்
சின்மயவடிவமாய்விளங்குந்
தென்றமிழ்ச் செட்டிகுளந்தனிலமர்ந்த
தெய்வமே தெண்டபாணியனே. (30)

தத்தைகள் கடியுந்தினைப்புனக்காத்த
    தையலினெழினலங்கருதி
சித்தனைப்போன்ற வடிவுகொண்டிரந்து
    சிவன்றருமானை யினருளால்
நத்தியவள்ளி யானைமாதோடு
    நண்பனைக்காத்திட வருவாய்
சித்திசேர் செட்டிகுளந்தனிலமர்ந்த
    தெய்வமே தெண்டபாணியனே, (31)

சரவணத்துன்னை யெடுத்தவம்பிகைதன்
    றனத்தெழுஞானப்பாற் கிண்ணஞ்
சரவணக்கரத் தேற்றருந்தியபோது
    தமியனேனெங்குறைந்தனனோ
சரவணோற்பவவென்றின் றுனையடைந்தேன்
    சாமி நீயென்றனைக்காவாய்
சிரவணச் செட்டிகுளந்தனிலமர்ந்த
    தெய்வமே தெண்டபாணியனே. (32)

முற்றிற்று.



உ

முருகன் துணை.

# தெண்டபாணி பதிகம்.

---

நாரணன்முதலாந்தேவர்க ளெல்லநடுங்கி
யோட்டம் பிடித்திடவே
காரணநஞ்சம் விழுங்கிமேலைவரைக்காத்தவனருட்
கணிற்றோன்றி
தாரணிநடுங்குஞ் சூரினைவென்றுதாங்கியவே
லொடுபொளிருஞ்
சீரணிமுருகன் றெண்டபாணியனைச்செட்டிமா
நகரிற்கண்டனனே. (1)

சீர்தரு கயிலைச்சிவனாறுமுகத்துத்தீவடி
வாகியகந்தன்
ஏர்தருசிருட்டித்தொழில் புரிபிரமற்செழிற்
சிறைபுரிந்து மற்றவன்செய்
பார்தருசிவசிருட்டிசெய்தருளும் பரமனுக்குரவ
னைத்தினமுஞ்
சேர்தருமடியார் தெண்டபாணியனை செட்டி
மாநாகரிற்கண்டனனே. (2)

பாப்புனைபுலவர் குழுவினிலென்னைப்பக்கமு
மிருந்திடவிடாது
நீப்புறமென்றன்வாட்ட மதுணர்ந்துநீணிலமதிற்
புலவோனாய்க்
காப்பு செய்கின்ற கந்தனைவடிவேற்கரத்தனை
க்கருணைமாகடலை
சேப்புறுமடியைத் தெண்டபாணியனைச்
செட்டிமாநகரிற்கண்டனனே (3)

திண்ணனாலளித்த விறைச்சியுண்டவன்றன்
சீரடிவைத்தருள் கூருங்
கண்ணினைக் கண்ணாலப்பியவவற்குக்காக்ஷிதந்
தருளினனிடப்பாற்
பண்ணியலுமையாள்பாலனை யருள்சேர்பரமனை
பழனியாண்டவனை
திணணியஞானத் தெண்டபாணியனைச் செட்டிமா
நகரிற்கண்டனனே. (4)

அருமறைநான்குமம் புயன்மாலு மறியொணா
ரன்றிருமகவாய்த்
திருவருள் புரிந்துநவவீரரோடு செந்திலிற்
றங்கிச்சேனையொடு
பெருவளமோங்கும மகேந்திரமுற்றுப்பே
ணியசூரினைத்தடிந்து
தெருமரலொழிக்குந்தெண்டபாணியனைச்
செட்டிமாநகரிற்கண்டனனே. (5)

சந்ததமடியாரொடு பரங்குன்றஞ்சார்
ந்துமிந்தின்றனையையை
பந்தமில்முனிவர் போற்றிடவதுவைபண்ணிய
பழனியாண்டவனைக்
கந்தனைவடிவேற்கரத்தனை யெழில்சேர்
கலாபனையாறெழுத்தானைச்
செந்தில்வாழ் பரனைத் தெண்டபாணியனைச்
செட்டிமாநகரிற்கண்டனனே. (6)

பன்னிருகரமும் பார்பதிமடியிற்பற்பல தொழி
லினைப்புரிய
தன்னிருவடியுந் தந்தையினகலந்தாங்குறுந்
தொடையினைவருட
சென்னியோராறு முருகனைச் செந்திற்றிகழ்
சுப்ரமண்யனைக்குகனை
தென்னியார் புகழுந்தெண்டபாணியனைச்
செட்டிமாநகரிற்கண்டனனே. (7)

என்னையாண்டவனை யென்னுயிர்த்துணையை
யெங்கணுந்[illegible]றந்தொளிர்பவனை
சென்னியாறனைத் தேவர்காத்தவனைத்தென்
பரங்குன்றனைச் செந்தூர்
மன்னனை யருட்கண்மணியை யென்பினையோர்
மங்கையதாக்கிய தேவைத்
தென்னவன் மகனைத்தெண்டபாணியனைச்
செட்டிமாநகரிற்கண்டனனே. (8)

இனித்தசெங்கரும்பிலெடுத்த தீஞ்சாற்றினி
ளம்பதப்பாகொடுதேனுங்
கனித்தமுக்கனியினிரதமுங் கலந்துகருத்
தெலாங்களித்திடவுண்ட
மணித்தருமமுதவுணவு கொண்டருந்தும்வா
னநாட்டாவர்களும் போற்ற
செனித்தமெஞ்ஞானத் தெண்டபாணியனை
செட்டிமாநகரிற்கண்டனனே. (9)

நித்தனைக்காலாயுதத்தனைச் செந்தூர்நேயனை
நிமலனைவாய்மைச்
சுத்தனைப்பழனித்தலம் வளர்ஞான சுகந்தனைச்
சூழ்ந்துநின்றேத்தாப்
பத்தனைக்காக்கும பரமனையருள்சோ பாதனை
யுமையிளங்கோவை
சிந்தனைக்குகனைத் தெண்பாணியனைச் செட்டி
மாநகரிற்கண்டனனே. (10)

முற்றிற்று.

வாழ்த்து

ஸ்காந்தம்.

ஆறிரு தடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம் வாழ்க வன்று
னேறியமஞ்ஞைவாழ்க யானை தன்னணங்குவாழ்க
மாறிலாவள்ளிவாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

முற்றிற்று.

